# அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்...!

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றிய அரசின் பொது முதலீட்டுக் குழு பரிந்துரைத்தபடி சென்னை மெட்ரோ ரயிலின் 2-வது கட்ட திட்டத்தினை, Central Sector Project ஆக அங்கீகரித்து ஒன்றிய அரசின் பங்கான ரூ.7,425 கோடியினை உடனடியாக வழங்கிட வேண்டும் என்பதேயாகும்.

**ஒன்றிய அரசு அங்கீகரித்த பங்கினை விரைந்து வழங்க வேண்டும்!**

மேலும் ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் ரூ.21,000 கோடி வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் கடன்களாக ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ள போதிலும் தமிழ்நாடு அரசு ரூ.5,880 கோடி மட்டுமே செலவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். உண்மையில் இதுவரை இத்திட்டத்திற்காக ரூ.18,564 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு இதுவரை தனது சொந்த நிதியிலிருந்து செலவிட்டுள்ள தொகை ரூ.11,762 கோடியாகும். வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் மூலமாக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூ.6,802 கோடியாகும். ஆனால் ஒன்றிய அரசின் பங்கான பொது முதலீட்டுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட ஒன்றிய அரசின் பங்கான ரூ.7,425 கோடியில் ஒரு ரூபாய் கூட ஒன்றிய அரசால் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

**ஒன்றிய நிதியமைச்சர் தமிழ்நாட்டை புறக்கணிப்பு பட்ஜெட் தாக்கல்!**

தமிழ்நாடு எவ்வாறு வஞ்சிக்கப்படுகிறது என்பதை இன்னும் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் 2021-22ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது ஒன்றிய நிதி அமைச்சர் அவர்கள் இந்தியாவில் நடைபெறும் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு குறித்து பேசும்போது கொச்சி, சென்னை, பெங்களூர், நாக்பூர் மற்றும் நாசிக் ஆகிய 5 நகரங்களுக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்புக்கு பின்பு பெங்களுருக்கு ரூபாய் 30,399 கோடி, கொச்சி நகரத்திற்கு ரூபாய் 1957 கோடி, நாக்பூர் நகரத்திற்கு ரூபாய் 6708 கோடி, பூனே நகரத்திற்கு ரூபாய் 910 கோடி, தானே நகரத்திற்கு ரூபாய் 12,200 கோடி மதிப்பீடு கொண்ட திட்டங்களுக்கு ஒன்றிய அரசு Central Sector Project அடிப்படையிலேயே ஒப்புதல் வழங்கி உள்ளது. ஆனால் இதுவரை சென்னைக்கு எவ்வித நிதி ஒதுக்கீடும் ஒன்றிய அரசு செய்யவில்லை.

மேலும், 2024-25 ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மகாராஷ்டிரா, புதுதில்லி, குஜராத், கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களுக்கெல்லாம் உரிய நிதி மற்றும் சார்நிலைக்கடன் (Equity and Subordinate Debt) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசின் இந்த நிதி ஒதுக்கீடு பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் தமிழ்நாடு அரசின் கோரிக்கையை நிறைவேற்றுக!**

நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு ஏன் மேற்குறிப்பிட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை? தமிழ்நாடு ஏன் மாற்றாந்தாய் பிள்ளையாக நடத்தப்படுகிறது? அரசியல் காரணங்களுக்காக பொது மக்கள் பாதிக்கப்படும் வகையில் திட்டங்களை தொய்வுப்படுத்தவும், மாநில அரசிற்கு நிதி நெருக்கடியை ஏற்படுத்தவும் இவ்வாறு செய்யப்படுகிறதோ என்று நமக்கு ஐயம் ஏற்படுகிறது.

எனவே இந்த ஐயத்தை எல்லாம் போக்கும் வண்ணம் தமிழ்நாடு அரசின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றும் இத்திட்டத்தினை தமிழ்நாடு அரசு சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருவதை கருத்தில் கொண்டும் ஏற்கனவே பொது முதலீட்டுக் குழு (PIB) பரிந்துரைத்துள்ளபடி தனது பங்கான ரூ.7,425 கோடியை ஒன்றிய அரசு வழங்கிட வேண்டுமென்றும், இத்திட்டத்தை Central Sector Project ஆக நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழ்நாடு அரசின் கடன் சுமையைக் குறைத்திட வழிவகை செய்திடவும், ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முன்னாள் அமைச்சர் கோ.சி.மணி அவர்களின் 96ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரின் இல்லத்தில் அமைக்கப்பட்ட கொடிக் கம்பத்தில் திருச்சி (தெ) மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கழக இருவண்ணக் கொடியேற்றி சிறப்பித்தார். இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசின் தலைமை கொறடா கோவி.செழியன், தஞ்சை(வ) மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். கல்யாணசுந்தரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் அன்பழகன், பேரூர் கழகச் செயலாளர், துணை மேயர் திருமதி.அஞ்சுகம் பூபதி, கோ.சி.இளங்கோவன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

## செப்டம்பர் 15 அண்ணா பிறந்தநாள் - தி.மு.க. பவள விழா!

# சென்னை மேற்கு மாவட்ட கழகத்தினர் அனைவரது இல்லங்களிலும் கழக கொடியேற்றுவோம்!

### மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை!

சென்னை, செப்.14-

கழக தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என அனைவரின் இல்லங்களிலும் கழகக் கொடி ஏற்றி பட்டொளி வீசிட வேண்டும் என சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு அறிக்கை விடுத்துள்ளார்.



தந்தை பெரியார் வழியில் 1949ம் ஆண்டு காஞ்சி தந்த பேரறினார் அண்ணா அவர்களால் மாபெரும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் அண்ணாவின் நம்பி உலகம் போற்றும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் 50 ஆண்டுகளுக்கு மேவாக கட்டிக்காக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து இராவிட மாடல் அரசின் கதாநாயகன் இந்தியாவின் No.1 முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வீறு நடை போட்டு வெற்றிகரமாக தி.மு.க. பவள விழா ஆண்டு நிறைவடைகிறது. ஆண்டுகளும் இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக செயல்பட்டு மக்களுக்காக நல்ல பல திட்டங்களை வழிவகுத்து மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக திகழ்கிறது.

ஆகவே கழகத்தின் பவள விழா மற்றும் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15ம் தேதி காலையிலேயே சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதி செயலாளர்கள் / வட்டக் கழக செயலாளர்கள் அலுவலகங்களில் உள்ள கழக கொடிக் கம்பங்களை புதுப்பித்து கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும். அதுபோல் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் என அனைவரின் இல்லங்களிலும் கழகக் கொடியேற்றி, வாசலில் கோலமிட்டு, சுவர் விளம்பரம் செய்தும் கழக இருவண்ணக் கொடியினை வரைந்தும் என நமது மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அறிவிப்பின்படி செய்திட வேண்டும் என மாவட்ட செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுபோல் நமது வட்டத்திற்குட்பட்ட அனைத்து கொடிக்கம்பங்களையும் வண்ணம் தீட்டி, புதுப்பித்து வருகிற செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் மற்றும் கழக பவள விழாவை முன்னிட்டு கழக மூத்த முன்னோடிகளை அழைத்து கழக கொடியை ஏற்றிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

திராவிட முன்னேற்றக் கழக பவளவிழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்ட கழகத்தினர், நிர்வாகிகள் அனைவரும் குடும்ப விழாவாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்ட செயலாளர் நே. சிற்றரசு தெரிவித்துள்ளார்.

# 76 (அ) வட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### வட்டச் செயலாளர் எஸ்.வெங்கடேசன் அறிக்கை!

சென்னை,செப்.14-

சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு ஆலோசனைபடி இன்று (14.09.2024, சனிக்கிழமை) சமுக நலக்கூடம் வெங்கடாத்திரி தெரு, குயப்பேட்டையில் மாலை 6 மணியளவில் 76 (அ) வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறுகிறது.

76 (அ) வட்ட கழக செயலாளர் எஸ்.வெங்கடேசன் தலைமை வகிக்கிறார்.

திரு.வி.க நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம்கவி, திரு.வி.க நகர் தெற்கு பகுதி செயலாளர் எம். சாமிகண்ணு ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

இதில் மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள் , கழக முன்னோடிகள், BLA2, BLC3 பாக நிலை முகவர்கள், வட்ட கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் என அனைவரும் கலந்து கொள்ளுமாறு வட்ட கழக சார்பில் கேட்டுக் கொள்கிறோம்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# "புரட்சி செய்து வருகின்ற முதல்வரை புன்னகைப் பூக்கள் தூவி வரவேற்போம்!"

ஒன்றல்ல... இரண்டல்ல... அமெரிக்காவில்
ஒப்பந்தம் பதினெட்டு நிறுவனங்களோடு
வென்றெடுக்கும் வகையிலே கையெழுத்திட்டு - வெற்றி
வீரராகத் திரும்புகிறார் நம் முதல்வர்.

புரட்சிமிகு சிந்தனை மனங்கொண்டு
புதுமையான அணுகுமுறை கைக்கொண்டு - புதிய
வரலாறு படைத்துவிட்டு வருகின்றார் - நமக்கு
வளமான எதிர்காலத்தை தருகின்றார்...! - இனி

தொழில்துறையில் தமிழ்நாடு முதலிடம்
தொடங்கட்டும் துலங்கட்டும் வருங்காலம்...!
எழிலோடு தமிழ்நாடு ஒளிரட்டும்...!
இமயமாய் சாதனைகள் மிளிரட்டும்!

வேலையில்லாப் பஞ்சமென்ற பேச்சுக்கே
வேலையின்றிச் செய்திட்டார் நம் முதல்வர்! தொழிற்
சாலைகளின் வரவாலே தமிழ்நாடு - பூஞ்
சோலைகளாய்த் திகழட்டும் சிறப்போடு...

அரும்பி நின்ற ஆசையெல்லாம் நிறைவேற்றி
அமெரிக்காவில் சாதனைக் கொடியேற்றி
திரும்புகிற முதல்வரை வருகவென
திக்கெட்டும் மலர்தூவி வரவேற்போம்!



திராவிட ஆட்சி பற்றி புரியாதவர்கள் - நம்
தளபதியின் மாட்சி பற்றி தெரியாதவர்கள்
தாராளமாய் வாழ்த்தலாம் அன்போடு - அதுதானே
தமிழர்களின் சிறப்பான பண்பாடு...!

-கவிஞர் இரவிபாரதி

## வி. ஆர். குப்பன் ஏற்பாட்டில் புழல் எம். நாராயணன் முன்னிலையில்

# மாதவரம் வடக்கு பகுதி 23 'அ' வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனைகள் வழங்கினார்!

சென்னை,செப்.14-

சென்னை வடகிழக்கு மாவட்டம்,மாதவரம் வடக்கு பகுதி, 23 அ வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் காவாங்கரை பகுதியில் அமைந்துள்ள துர்கா பவன் ஹோட்டல் அரங்கில் நடைபெற்றது.

23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் ஏற்பாட்டில்,

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில்,

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார்.

23 அ வட்ட அவைத் தலைவர் ஏ. ராமச்சந்திரன் தலைமை தாங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி,23 அ வட்டத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகள் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பொது உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டார்கள்.இக்கூட்டத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ கலந்து கொண்டு முப்பெரும் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். பின் பொது உறுப்பினர்கள் அனைவருக்கும் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை வட்டக் கழக நிர்வாகிகள் எம்.உசேன் மைதீன், பி.சுதாகர், பி.அறிவழகன், டி.பார்பன், வி.ஹரி, ஏ.அப்துல் சமது, ஜி.பார்த்திபன், பி.முத்து கிருஷ்ணன் ஆகியோர் வரவேற்றனர்.

பொதுக்குழு உறுப்பினர் என். பரந்தாமன்,மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி,மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் எம்.அமுதா, ஆர். சுதா, மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜெ. யுவராணி,மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் எச். பீர்முகமது, பகுதி கழக நிர்வாகிகள் கே. சிவசங்கரன்,நா. மோகன் குமார் நாகூரார், வி. திராவிட வீரன், 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், முருகேசன், சீனிவாசன், வெங்கடேஷ் சரவணன், அசோக், காமராஜ், வாசு, பாலமுருகன், சிட்டி சேகர் ,அன்பழகன், பாஸ்கர், ரமேஷ், ஜெயிலிங்கம், நாகராஜ்,மதன்ராஜ், சுந்தர், யுவராஜ் ,சாமி, விஷ்ணு, அசோக், ராஜேஷ், வினோத், ஜவகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் ஆணைப்படி, முப்பெரும் விழாவை சிறப்பாக நடத்துவது எனவும், வீடுகள் தோறும் கழக கொடி ஏற்றி கழக பவள விழாவை கொண்டாடுவது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை 23 அ வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் செய்து இருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்ட பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் ஏற்பாட்டில் காவாங்கரை துர்கா பவன் ஹோட்டலில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கிய போது எடுத்த படம் உடன் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளனர்

கோபாலபுரம்

# பி.மூர்த்தி இல்ல மணவிழா!

## கழகத்தினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, செப். 14 -

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முன்னாள் கார் ஓட்டுநர் - கோபாலபுரம் பி. மூர்த்தியின் மைத்துனியின் மகளும் - கொளத்தூர் தொகுதி 68வது வட்டம் - பெரியார் நகர் டி.டேவிட் மோசஸ்-68வது வட்ட மகளிர் அணி டி ஜெஸிந்தா டேவிட் ஆகியோரின் புதல்வியுமான டி. நான்சி பிரிஸ் சில்லா வுக்கும், சென்னை ரெட்டேரி இலட்சுமிபுரம் ஏ.வி.ஹேம்



குமார் - எச். சோமி ஆகியோரின் புதல்வர் எச். சசிகுமாருக்கும் மணவிழா 16.9.2024-திங்கள் காலை 9 மணியளவில் பெரவள்ளூர் எஸ்.ஆர்.பி. ஜோவில் தெருவில் அமைந்துள்ள வைரமணி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு 15.9.2024 - ஞாயிறு மாலை 6.30 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழக முன்னணியினர், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக செயல் வீரர்கள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



நாகப்பட்டினம் மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தலைமைக் கழக அறிவிப்பிற்கிணங்க நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் என். கவுதமன் தலைமை வகித்தார்கள் மாநில மகளிர் அணி செயலாளர் மாநில சமூக வலைத்தள பொறுப்பாளரும், மண்டல பொறுப்பாளருமான ரேகா பிரியதர்ஷினி, மாநில சமூக வலைத்தள பொறுப்பாளரும், நாகை மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளருமான ரத்னா லோகேஷ்வரன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மகளிர் அணி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்கள். புதிதாக உறுப்பினர் சேர்க்கை, கழக அரசின் சாதனைகளை இல்லந்தோறும் திண்ணைப் பிரச்சாரம் வாயிலாக கொண்டு சேர்த்தல், கழக முப்பெரும் விழாவில் குடும்பத்தோடு கலந்து கொள்ளுதல், இல்லந்தோறும் கழக இரு வண்ணக் கொடி பட்டொளி வீசி பறக்க செய்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.. மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர், மாவட்ட மகளிர் அணி தலைவர், மகளிர் அணி துணை தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்..